


32ஆவது ஆண்டில்

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

Tel: 416-282-8059 | www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca | www.tamilvanakkam.com




நிதி: 32 | பாலம்: 01 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 01, 2022

# பிரபஞ்சத்தின் மர்மங்களை வெளிக்கொணரும் பயணம்!

பிரபஞ்சத்தின் மர்மங்களை வெளிக்கொண்டுவரும் பயணத்தை நாசா (NASA) வினுடைய James Webb விண்வெளித் தொலைநோக்கி தென் அமெரிக்காவின் வட கிழக்குக் கரையோரப் பகுதியில் இருக்கும் French Guiana நாட்டின் Guiana விண்வெளி மையத்திலிருந்து நத்தார் தினமான 2021 டிசம்பர் 25ஆம் திகதி காலை 7:20இற்கு ஆரம்பித்தது.

அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய விஞ்ஞானிகளால் 30 வருட ஆய்விலும் உழைப்பிலும் தயாரான இந்த James Webb விண்வெளித் தொலைநோக்கி நவீன விஞ்ஞான உலகின் அதி உன்னதமான தயாரிப்பு என்றும் மற்றும் பொறியியல் அதிசயம் (Engineering Marvel) எனவும் விஞ்ஞானிகளால் வர்ணிக்கப்படுகிறது. இந்தத் தொலைநோக்கி பிரபஞ்சம் தோன்றியதற்கான அடிப்படைக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க உதவும். இத்தொலைநோக்கி 13.8 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் என்ன நடந்தது என பின்னோக்கிப் பார்க்கும் ஆற்றல் வாய்ந்தது. விஞ்ஞானிகளின் தற்போதைய கணிப்பின்படி 13.8 பில்லியன் வருடங்களுக்கு முன்னர்தான் பெரு வெடிப்பு (Big Bang) ஏற்பட்டு இந்தப் பிரபஞ்சம் தோன்றியது.

நத்தார் தினத்தின் காலைப்பொழுதில் ஏரியன் 5 விண்வெளி ஏவுகணை (Ariane-5 Rocket) மூலம் இந்த விண்வெளித் தொலைநோக்கி விண்வெளிக்குச் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு நாசாவின் விஞ்ஞானப் பிரிவின் தலைவர் Thomas Zurbuchen "இது ஒரு மிகவும் சிறந்த நத்தார்ப் பரிசு" என்று கூறினார்.

புளோரிடாவின் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஊடகங்களுக்குப் பேட்டியளித்த நாசாவின் நிர்வாகி Bill Nelson இந்த விண்வெளி தொலைநோக்கியை ஒரு நேர இயந்திரம் (Time Machine) என அழைத்தார். "இது நமது பிரபஞ்சம், நமது நிலை என்பது பற்றி ஒரு சிறந்த புரிதலை நமக்கு வழங்கும். நாம் யார்? எமது நோக்கம் என்ன? என்ற எமது நீண்ட தேடலுக்கும் உதவி செய்யும். நாங்கள் இதுவரை கற்பனை செய்து பார்க்காத எம்மால் நம்பமுடியாத பல விடயங்களைக் கண்டுபிடிக்கப் போகிறோம்" என்றார். அவர் அத்துடன் ஒரு சிறு எச்சரிக்கையையும் விடுத்தார். "இந்த விண்வெளித் தொலைநோக்கி சரியாகத் தொழிற்பட இன்னும் பல எண்ணிலடங்காத செய்முறைகள் ஒழுங்காக நடைபெற வேண்டும். அவை எல்லாம் சரியான நேரத்தில் சரியாக வேலை செய்ய வேண்டும் அதனால் நாம் எதிர்பார்க்கும் இந்தப் பெரிய கண்டுபிடிப்பு சரியாக நிறைவேறப் பல பெரிய தடைகள் உள்ளன. அவற்றையெல்லாம் நாம் தாண்ட வேண்டும் என நாங்கள் அறிவோம்" என்றார்.



Ariane 5 rocket with NASA's James Webb Space Telescope onboard lifts up from French Guiana

இந்த விண்வெளித் தொலைநோக்கிக்கு அப்பலோ விண்வெளிப் பயணங்களை நாசா மேற்கொண்ட 1960ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாசாவினுடைய நிர்வாகியாக இருந்த James Webb என்பவரது நினைவாக அவரது பெயர் சூட்டப்பட்டது. இந்தத் தொலைநோக்கியின் தயாரிப்பில் பல ஆயிரக்கணக்கானோர் 29 நாடுகளில் இருந்து, 1990ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றி வந்தனர். இந்த விண்வெளி தொலைநோக்கியின் தயாரிப்பிற்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர் செலவாகியுள்ளது.

வான்வெளியைக் கண்காணிக்கப் போகும் இந்த விண்வெளித் தொலைநோக்கி பூமியிலிருந்து 1.6 மில்லியன் கிலோமீற்றர் தொலைவில் பூமியிலிருந்து சூரியன் இருக்கும் திசைக்கு எதிர்ப்பக்கத்தில் நிலைகொண்டிருக்கும். அதாவது இவ் விண்வெளி தொலைநோக்கி பூமியில் இருந்து சந்திரன் இருக்கும் தூரத்தை விட நான்கு மடங்கு தூரத்தில் இருந்து கொண்டு சூரியனைச் சுற்றி வரும். இந்த இடத்தை இவ்விண்வெளித் தொலைநோக்கி அடைய ஒரு மாதம் ஆகும். அதன் பின்னர் அவ்விடத்தில் இருந்து கொண்டு பிரபஞ்சத்தை ஆராயத் தன்னைத் தயார்படுத்த மேலும் 5 மாதங்கள் எடுக்கும்.

பல்வேறு காரணங்களுக்காக பின் போடப்பட்டு வந்த விண்வெளித் தொலைநோக்கியை விண்வெளிக்கு ஏவும் நிகழ்வு கடந்த வாரம் மீண்டும் அங்கு வீசிய பலத்த காற்றால் நத்தார் தினத்திற்குப் பின் போடப்பட்டது. இறுதியாக நத்தார் தினத்தன்று உலகெங்கிலும் உள்ள வானவியலாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இணையதளம் மூலம் விண்வெளித் தொலைநோக்கி ஏரியன் 5 விண்வெளி ஏவுகணை மூலம் விண்வெளிக்குச் செலுத்தப்படும் நிகழ்வை நேரலையில் பார்வையிட்டனர்.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)




புதிய எண்ணங்கள்
புதிய கனவுகள்
புதிய முயற்சிகள்
புதிய நம்பிக்கைகள்
புதிய திட்டங்கள்
புதிய இலக்குகளோடு
புன்னகை ததும்ப புத்தாண்டை வரவேற்போம்

**இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்**
























RE/MAX ACE
EXPERIENCE THE DIFFERENCE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5

Thas Thirunavukkarasu Dip-in- Eng(Hons)
Broker, ABR, SRS
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Builders' Approved VIP/Platinum Agent

VIP Sale Now On
5% Down

West Peak Condos
From $528,000 Guelph

Joshua Creek Detached
Oakville, From $1,199,900

Tricycle Condos
Scarborough, Move in 2023

Connectt Condos 2
From $549,000 Milton

Hewitt's Gate Towns
Barrie, From $555,900

Stockyards District
Toronto, Move in Late 2022

Four Me Condos
From $598,000 Scarborough

Rosepark Towns
Vaughan, From $1,355,900

Selling?
Call for FREE Report
(Upto $5000 Value)

The Ambrose Condos
From $470,900 Brantford

High Park Towns
Aurora, From Mid $700's

Buying?
Excellent Mortgage
Approval Network

Rossmont Green
From $499,000 Whitby

Swan Lake Towns & Semi
Richmond Hill, From $1,479,900

இனிய தைப்பொங்கல் புதுவருட நல்வாழ்த்துகள்.

# பிரபஞ்சத்தின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நத்தார் விடுமுறை தினத்தில் இந்நிகழ்வு நடைபெற்றதாலும் கோவிட்-19 தொற்று நோய் பரவல் காரணமாக கடைப்பிடிக்கப் பட்ட கட்டுப்பாடுகளினாலும் இவ்விண் வெளித் தொலைநோக்கியை விண்வெளிக்கு ஏவப்படும் விண்வெளி மையத்தில் இந்த நிகழ்வை நேரடியாகப் பார்வையிட மிகக் குறைவானவர்களே அனுமதிக்கப்பட்டிருந்த னர். இந்த மையத்தில் இவ்விண்வெளி ஏவுகணைக் கட்டுப்பாட்டாளர்கள் சிலர் இந்த நிகழ்வைக் கொண்டாடும் முகமாக நத்தார் தாத்தாவின் சிவப்புத் தொப்பி அணிந்து இருந்தனர்.

விண்வெளித் தொலைநோக்கி விண்வெளிக்கு ஏவப்பட்டதைத் தொடர்ந்து விண்வெளித் தொலைநோக்கி நிலையத்தின் இயக்குனர் நாயகம் Josef Aschbacher ஊடகங் களுக்குத் தெரிவிக்கையில் "மனித குலத்துக்கு இன்று நாங்கள் நத்தார் பரிசை வழங்கி உள்ளோம்" என்றார். இது ஒரு சிறப்புத்தருணம் என்று கூறிய Josef மேலும் கூறுகையில் "நான் மிகவும் பதட்டமான நிலையில் (Nerve racking) இருந்தேன். என்னால் ஒவ்வொரு நாளும் இவ்வாறு ஏவுதல் செய்ய முடியாது. இது எனது ஆயுளுக்கு நல்லது அல்ல" என்றார்.

ஒரு தடங்கலும் இல்லாமல் நல்லபடியாக விண்வெளித் தொலைநோக்கி விண்வெளிக்கு ஏவப்பட்டதைத் தொடர்ந்து விண்வெளி மையத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஆரவாரங்களும் கைதட்டல்களும் பலமாக இருந்தன. விஞ்ஞானிகள் "Go Webb" மற்றும் "Bon Voyage Webb" என்று எழுதப்பட்ட பதாதகைகளுடன் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி மகிழ்ந்தனர்.



இந்த James Webb விண்வெளித் தொலை நோக்கியின் மிக முக்கியமான பாகம் அதனுடைய 6.5 மீற்றர் விட்டமுடைய பொன் முலாம் இடப்பட்ட கண்ணாடி யாகும். இதைப் பாதுகாப்பது மிகவும் உயர்ந்த தொழில் நுட்பத்துடன் தயாரிக் கப்பட்ட ஐந்து பட்டைகளையுடைய சூரிய ஒளிக் கவசங்கள் ஆகும். இந்த 21 மீற்றர் நீளம் 14 மீற்றர் அகலம் கொண்ட, அதாவது ஒரு ரெனிஸ் விளையாட்டு மைதானம் (Tennis Court) அளவு பரப்பளவுடைய சூரிய ஒளிக் கவசங்கள் ஒளி சேகரிக்கும் மற்றும் வெப்பத்தை உணரக்கூடிய Infrared ஒளிக்கதிர்களைக் கண்டறியக் கூடியதுமான விண்வெளித் தொலைநோக்கியின் பொன் முலாம் இடப்பட்ட கண்ணாடியை பூச்சியத்துக்கு மிகவும் கீழ் உள்ள வெப்பநிலையில் தொடர்ந்து வைத்திருக்க இன்றியமை யாதனவாகும். இது ஒழுங்காக மடிக்கப் பட்டு தொலைநோக்கியுடன் விண்வெளி ஏவுகணைக்குள் வைக்கப்பட்டுள்ளது.



"எல்லாம் சரியாக நடந்தால் James Webb விண்வெளித் தொலைநோக்கி விண்ணில் ஏவப்பட்டதிலிருந்து மூன்று நாட்களுக்குப் பின்னர் இந்தச் சூரிய ஒளிக்கவசங்கள் திறக்கப்படும். அவை விரிவடைந்து ஒன்றுடன் ஒன்று பூட்டப்பட குறைந்தது ஐந்து நாட்கள் தேவை. அதன் பின்னர் பொன் முலாமிடப்பட்ட கண்ணாடியின் பகுதிகள் ஒவ்வொரு இலை விரிவது போல் விரிந்து திறக்க மேலும் 12 நாட்கள் எடுக்கும். இவ்வாறு இந்த விண்வெளி தொலைநோக்கி தன்னைத் தயார்படுத்த பல நூற்றுக்கணக்கான செய்முறைகளைச் செய்ய வேண்டும். இத்தகைய செய்முறை கள் ஒன்றும் இதற்குமுன் செய்து பார்க் கப்படவில்லை. இவ்வாறு எதையும் நாம் இதற்கு முன்னர் விண்வெளியில் செய்ய வில்லை. இதுவே முதல் முறையாகும்" என நாசாவின் செயற்திட்ட இயக்குனர் Greg Robinson ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

Baltimoreஇல் உள்ள விண்வெளித் தொலைநோக்கி விஞ்ஞான மையத்தின் Webb விண்வெளித் தொலைநோக்கிக் கட்டுப்பாட்டு அலுவலகத்தின் தலைமை அதிகாரியான வானவியலாளர் Massimo Stiavelli ஊடகங்களுக்குத் தெரிவிக்கை யில் "இனி இங்கிருந்து தொடங்கி தொடர்ந்து வேலைகளைச் செய்வது எமது வேலை" என்றார். இந்த நிறுவனமே Hubble தொலைநோக்கியின் கட்டுப் பாட்டு மையமாக இருந்தது. இப்போது இது Webb தொலைநோக்கியின் கட்டுப் பாட்டு மையமாக இயங்கப்போகிறது.
இந்த நிறுவனத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற விண்வெளி வீரரும் வானவியலாளருமான Steven Hawley ஊடகங்களுக்குத் தெரி விக்கையில் 1990ஆம் ஆண்டில் விண் வெளிக்கு Discovery விண்வெளி ஓடத்தில் ஏவப்பட்ட Hubble தொலைநோக்கியை விட நூறு மடங்கு சக்தி வாய்ந்த இந்த Webb தொலைநோக்கியைத் தயாரிப்பது மிகவும் கடினமான வேலையாகவும், மிகவும் மன அழுத்தத்தைத் தந்ததாக வும் இருந்தது எனக் கூறினார். ஏனெனில் Hubbleஇன் கண்ணாடியில் மாசுகள் இருந்தபோது அங்கு சென்று அதைத் திருத்த முடிந்தது. ஆனால் Webb

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 598

# ஆதன விலை மாற்றம் 2022



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

புதிய ஆண்டில் அன்பான அமைதியான சிறப்பான மன நிம்மதியான வாழ்வு பெற நல்வாழ்த்துகள்.
அன்புடன் ராஜா மகேந்திரன்

ஆதனம் சார்பான தொடர் ஆக்கங்களை நான் இந்தப் பகுதியில் எழுதி வருவது சகலரும் அறிந்ததே. இந்த ஆக்கம் அந்தந்தக் காலங்களுக்கு ஏற்ப எழுதப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் எழுதப்படும் அல்லது எதிர்வுகூறும் விடயங்களில் மாற்றங்கள் அல்லது எதிர்பார்த்ததைவிட முற்றிலும் மாறாக நடந்திருப்பதை நான் கண்டிருக்கிறேன். இது இயல்பே.

இது அவ்வாறுதான் நிகழும் என எவராலும் கூற முடியாது. எனினும் எமது தொழிலில் சார்பான அனுபவங்களைக் கொண்டு சரியானதும் உண்மையானதுமான தகவல்களை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதே இந்த ஆக்கங்களின் முக்கிய நோக்கம். இந்த ஆக்கங்கள் பற்றிய வாசகர்களின் பின்னூட்டல்கள் வரும்போது இன்னும் மிகவும் கவனமாகவும் நேர்த்தியாகவும் தெரியப்படுத்த வேண்டும் என்ற மேலதிக கடமையும் தோன்றுகிறது.

2020 மார்ச் இல் ஏற்பட்ட கொரோனாவின் தாக்கம் ஒரு சில மாதங்கள் ஆதன வியாபாரத்தை முற்றாக முடக்கியதை எமது வாசகர் நிச்சயம் அறிந்திருப்பீர்கள். சகல வளம் பொருந்திய நாடுகளே நிச்சயமாக என்ன நடக்கும் என்று கூற முடியாத நிலையில் முட்டிமோதியதனைக் காணக்கூடியதாக இருந்தது.

எனினும் ஆதன முதலீடு என்பது நீண்ட கால முதலீடு. எதிர்பாராமல் நிலைமைகள் மோசமடையும் போது ஆதனத்திற்குரிய மாதாந்தக் கொடுப்பனவைக் கொடுக்கக் கூடிய வழிமுறைகளை தெரிந்திருக்க வேண்டும்.

இவ்வாறான நிலைமைகள் நிச்சயமாக வரும் என்பதைக் கடந்த காலங்களில் பல தடவைகள் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இன்றைய சூழ்நிலையில் ஆதன விலை அதிகரிப்பு முன்னெப் போதும் இல்லாத அளவிற்கு அதீதமாக உள்ளதை என்னால் காணக்கூடியதாக உள்ளது.

இது தொடருமா இல்லையா என்று கூறுவது கடினமாக உள்ளவாறு புறச் சூழல்கள் காட்டுகின்றன. எனினும் ஆட்சியாளர்கள் அதீத விலை அதிகரிப்பை முடக்கப் பார்ப்பர். அதுவே அரசின் கடமை. வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வழிமுறைகள் வெளிப்படுத்தப் படும். அல்லது இயற்கை, செயற்கை போர் போன்றவை இவ்வாறாகப் புறநிலைகளை உருவாக்கும். அதன் தொடர்ச்சி யாக குறிப்பிட்ட காலம் அதன் பாதிப்பு தொடரும். பின்னர் நிலைமை முற்றாக மாறும். மக்களும் சகலத்தையும் மறந்து புதிய உலகில் சஞ்சரிப்பர்.

2021 வருடக் கடைசியில் வந்த பொருளாதார அறிக்கையால் புது வருடத்தில் வட்டி வீதம் அதிகரிக்கலாம் என்றும் அத்துடன் ஆதன விலையில் தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்படும் என்றும் தெரியப்படுத்தப்படுகின்றது.

நிலமை சற்று பழைய நிலைக்கு வரும் போது மீண்டும் ஓமிக்குரோன் (Omicron) என்ற புதிய திரிபு வைரஸ் அதிக மக்களை பாதிப்பதாகத் தெரியவருகிறது. இந்த வைரஸினால் குறைவான உயிர் இழப்பு ஏற்படுகிறது என்பது மன நிம்மதியைக் கொடுக்கின்ற போதிலும் நிலைமை எந்நேரத்திலும் மாறலாம். இதனால் ஆட்சியில் இருப்போர் மக்களை பழைய இறுக்கமான நிலைமைக்குக் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். இதன் தாக்கம் குறைய Delmicron (Delta + Omicron) என்ற புதிய வைரஸ் வருகிறது என்று தெரிய வருகின்றது. இதன் பாதிப்பு எவ்வாறு இருக்கும் என பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இதனால் உலக பொருளாதாரம் நிச்சயம் பாதிப்படையும். இதன் தொடர்ச்சி ஆதன வியாபாரத்தையும் பாதிக்கும்.

இதனால் ஆதன வியாபாரம் போதியளவு நடைபெறும் சாத்தியங்கள் குறைவடையும். நாட்டுக்கு வரும் புதிய குடிவரவாளர்களின் எண்ணிக்கையை தற்போதைய கனடிய சனத்தொகையின் 1% என்ற அளவிற்கு மேலாக வைத்திருக்கவே அரசு விரும்புகிறது.

இவர்களிற்கு மேலதிக குடியிருப்பு ஆதனங்கள் தேவைப்படும். ஏற்கனவே அதிகரித்து வரும் ஆதனங்களின் விலை மற்றும் வாடகை தொடர்ந்து அதிகரிக்கும் என்பதே எனது கணிப்பு. எனினும் புறக்காரணிகளும் பெரிய பங்கை வழங்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

Toronto Regional Real Estate Board

HISTORIC ANNUAL STATISTICS[1,6,7]

| Year | Sales | Average Price |
|---|---|---|
| 2009 | 86,980 | $395,234 |
| 2010 | 85,860 | $431,262 |
| 2011 | 89,110 | $464,989 |
| 2012 | 85,488 | $497,073 |
| 2013 | 87,047 | $522,951 |
| 2014 | 92,776 | $566,611 |
| 2015 | 101,213 | $622,116 |
| 2016 | 113,040 | $729,921 |
| 2017 | 92,340 | $822,408 |
| 2018 | 78,017 | $787,800 |
| 2019 | 87,747 | $819,043 |

2020 MONTHLY STATISTICS[1,7]

| | | |
|---|---|---|
| January | 4,546 | 838,087 |
| February | 7,193 | 910,068 |
| March | 7,942 | 902,788 |
| April | 2,957 | 820,226 |
| May | 4,594 | 863,563 |
| June | 8,645 | 931,131 |
| July | 11,033 | 943,594 |
| August | 10,738 | 951,219 |
| September | 11,033 | 960,613 |
| October | 10,503 | 968,535 |
| November | 8,728 | 955,889 |
| December | 7,154 | 932,297 |
| Annual | 95,066 | $929,636 |

2021 MONTHLY STATISTICS[1,7]

| | | |
|---|---|---|
| January | 6,888 | $966,068 |
| February | 10,931 | $1,044,933 |
| March | 15,628 | $1,097,351 |
| April | 13,616 | $1,090,522 |
| May | 11,904 | $1,108,109 |
| June | 11,060 | $1,089,135 |
| July | 9,340 | $1,062,071 |
| August | 8,556 | $1,070,093 |
| September | 9,017 | $1,136,011 |
| October | 9,759 | $1,155,423 |
| November | 9,017 | $1,163,323 |
| December | | |
| Year to Date | 115,716 | $1,092,212 |



Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# MORTGAGE & LINE OF CREDIT




⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்
வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC



ஜெ(Jey)இராசதுரை
MBA BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicanada.com

**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd , Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

Notarizations, Certifications & Commissioning

- ★ Affidavits
- ★ Certification of true copy
- ★ Preparation and notary of Letter of Invitation
- ★ Commissioning statutory declarations and solemn affirmations

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call: (416) 814 -7450**

(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students $20per sign

# குற்றவாளிகளால் இலக்கு வைக்கப்படும் முதியோர்




மூன்று வருடங்களுக்கு முன்னர் லண்டனிலிருந்து வந்து, கிளிநொச்சியில் தங்கியிருந்த 67 வயதான பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு ஒரு பாலத்திற்கு கீழ் வீசப்பட்டிருக்கின்றார். இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 22 வயதான இளைஞன் பணத்திற்காகவே இக்காரியத்தை செய்ததாகவும், தனக்கு போதைப்பொருள் பாவனைக்கு பணம் தேவைப்பட்டதாகவும் பொலிஸாரிடம் கூறியுள்ளான்.

இராசேந்திரம் இராசலட்சுமி என்ற இந்தப் பெண் லண்டனில் அவரது மகனுடன் வாழ்ந்து வந்துள்ளார். பிள்ளைகள் அனைவரும் வெளிநாட்டில் வாழும் நிலையில் கிளிநொச்சியில் இருக்கும் காணியை பார்க்க, பராமரிக்கவே நாட்டிற்கு வந்ததாகத் தெரியவருகின்றது.

கொலை செய்யப்பட்ட பெண் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி தம்பிராய் பகுதியை சேர்ந்தவர் என்றும், அவரது ஐந்து பிள்ளைகளும் வெளிநாட்டில் வாழ்ந்து வருவதாகவும், கணவர் பூனகரியில் விவசாயம் செய்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இவரது காணி ஒன்று கிளிநொச்சி உதயநகர் மேற்கில் உள்ளது. நீண்ட காலம் பராமரிப்பின்றி இருந்த அக் காணியில் சில வருடங்களுக்கு முன்னர் வீடு அமைக்கப்பட்டு காணி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. குடும்பம் ஒன்று அக் காணியில் வாடகைக்கு இருந்து சில மாதங்களுக்கு முன்னர் வெளியேறி விட்டது. எனவே, அக்காணியையும் வீட்டையும் பார்க்க குறித்த பெண் அடிக்கடி வந்து செல்வார்.

உதயநகர் வீட்டிலேயே அவர் தங்கியிருந்திருந்தால் அவருக்கு இப்படி யொரு நிலை ஏற்பட்டிருக்காது. சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அம்பாள்குளம் என்ற இடத்தில் வேறு ஒரு வீட்டில் அவர் தங்கியிருந்த நிலையியே இத்துயரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. உதயநகர் வீட்டில் தனியாக தங்கி யிருக்கப் பயந்து அம்பாள்குளத்தில் அவர் தங்க விரும்பியதாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.



கடந்த 27ஆம் திகதி அவரைக் காணவில்லை என்று பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் அவர் வங்கிக்கு சென்று வந்ததாகவும், பிற்பகல் 3 மணியிலிருந்து 6 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் அவர் காணாமல் போனார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

முறைப்பாட்டையடுத்து பொலிஸார் பெண் தங்கியிருந்த அம்பாள்குளம் வீட்டிற்கு சென்று சோதனையிடப்பட்ட போது வீட்டில் இரத்தக்கறை காணப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். குறித்த வீட்டின் உள்ளே இரத்தக் கறைகள் காணப்பட்டதால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அம்பாள்குளம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது, அந்த நபரால் பெண்ணின் சடலம் அடையாளம் காட்டப்பட்டுள்ளது.

பெண் கொலை செய்யப்பட்டு அவரது சடலம் சம்பவம் இடம்பெற்ற பகுதி யிலிருந்து சுமார் 18 கிலோமீற்றர் தொலைவில் - கிளிநொச்சி நகரின் மேற்குப் பகுதியில் உள்ள யூனியன் குளத்திற்கும், ஸ்கந்தபுரத்திற்கும் இடையி லுள்ள பரப்பாலத்திற்கு கீழே பொதி செய்யப்பட்ட நிலையில் வீசப்பட்டிருந்தது.

பெண் கொலை செய்யப்பட்டு, இன்னொரு வரின் உதவியுடன் மோட்டார் சைக்கிளில் எடுத்துச் செல்லப்பட்டு வீசப்பட்டதாக அந்த நபர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் வாங்க பணம் தேவைப் பட்டதாலேயே அப்பெண்ணை கொலை செய்ததாக பொலிஸார் தொடர்ந்து மேற் கொண்ட விசாரணையில் அந்த நபர் தெரிவித்துள்ளார். குறித்த நபரிடம் இருந்து கொலை செய்யப்பட்ட பெண்ணின் ஒரு சோடி தோடு, ஒரு சோடி காப்பு, ஒரு சங்கிலி, இரு மோதிரங்கள் ஆகிய தங்க ஆபரணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் நடைபெற்ற இந்த சம்பவத்தை உதாரணமாகக் கொண்டு இரண்டு விடயங்களை நாம் இங்கு கவனத்தில் கொள்ளலாம்.

நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்களில் வயோதிபர்கள் கொல்லப்படும் சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. தனியாக வாழ்ந்து வரும் வயோதிபர்கள் இவ்வாறு கொல்லப்படுகின்றனர். இவர் களிடம் கொள்ளையடிப்பதற்காகவே இக் கொலைகள் நடத்தப்படுகின்றன.

தமிழ் பிரதேசங்களில் குறிப்பாக வட மாகாணத்தில் தனியாக வாழும் வயோதிபர்களின் வீடுகளை இலக்கு வைத்து கொள்ளையில் ஈடுபடுகின்றவர் களால் வயோதிபர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்ற சம்பவங்களும், கொலை செய்யப்படுகின்ற சம்பவங்களும் நடை பெற்று வருகின்றன.



இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகின்றவர் கள் தங்கள் பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்து அனுப்புகின்ற பணத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்து பவர்கள். அல்லது வெளிநாடுகளிலிருந்து தங்கள் காணி, வீடுகளைப் பார்வையிட வந்து தனியாகத் தங்கியிருப்பவர்களாக காணப்படுகின்றனர். இவர்களிடம் பணம் மற்றும் நகைகள் சொத்துக்கள் இருப் பதை குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் கண்டறிந்து கொள்கின்றனர். இதனால் கொள்ளையடிப்பதற்காகவே இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது.

இரண்டாவது - வடமாகாணத்தில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற்பனை என்பன நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகும் இளைஞர்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர். போதைப் பொருளுக்கு அடிமையாகும் இளைஞர் கள் அதனைப் பெறுதற்குப் பணம் இல்லாவிட்டால் கொலையும் செய்ய ஆயத்தமாக இருக்கின்றனர்.

திருட்டு வேலைகளில் ஈடுபடுவது, பணம் படைத்தவர்களின் தேவைக்காக கூலிப் படையாக செயல்படுவது போன்ற குற்றச் செயல்களில் தமிழ் பிரதேசங்களில் உள்ள இளைஞர் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற சம்பவத்தில் தனக்கு போதைப்பொருள் வாங்க பணம் தேவைப்பட்டதாலேயே வயோதிப பெண்ணை கொலை செய்ததாக கைது செய்யப்பட்ட நபர் தெரிவித்துள்ளதைக் கொண்டு இதனைப் புரிந்து கொள்ளலாம்.

புலம்பெயர் நாடுகளுக்கு சென்று வாழும் முதலாவது சந்ததியினர் இன்று முதியவர் களாக உள்ளனர். இரண்டாம் சந்ததியினர் நாட்டுக்கு வருவது ஒரு சுற்றுலா போன்றதே. முதலாவது சந்ததியினர் தங்கள் காணி, வீடு, சொத்துக்களின் மீதுள்ள பற்றின் காரணமாகவே வருகின்ற னர். வந்து மாதக்கணக்கில் அல்லது வருடக்கணக்கில் தங்கியிருக்கின்றனர். இவர்கள் தங்கள் உறவினர்களுடன் தங்குவதை விடவும் தங்கள் வீடுகளில் தனியாக தங்குவதையே விரும்புகின்றனர். இதன் காரணமாகவே பல ஆபத்துக் களுக்கு அவர்கள் முகம்கொடுக்கின்றனர்.

பிள்ளைகள் தங்கள் ஊர்களில் உள்ள சொத்துக்கள் குறித்து அதிக அக்கறை கொள்வதில்லை எனவும், முதியோரான அவர்களின் பெற்றோர்தான் ஊரிலுள்ள தங்கள் சொத்துக்கள் தொடர்பில் கவலை கொள்வதாகவும் கனடாவிலுள்ள எனது நண்பர் ஒருவர் கூறினார். அதுவும் தாங்களின் கடின உழைப்பால் தேடிய சொத்துக்கள் மற்றும் அவர்களின் பெற்றோரின் பாரம்பரிய சொத்துக்கள் தொடர்பில் அவர்கள் அதிக அக்கறை கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். நாட்டிலுள்ள உறவினர்களிடம் அந்த சொத்துக்களை கையளிக்கவும் அவர்கள் விரும்புவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புலம்பயர் நாடுகளில் வாழும் இளையோ ரான இரண்டாம், மூன்றாம் சந்தியினர் ஊரில் உள்ள சொத்துக்களில் அக்கறை கொள்ளாவிடினும், உதவும் பணிகளில் உணர்வுபூர்வமாக அவர்கள் செயல்பட்டு வருகின்றமையினையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

புலம் பெயர்ந்து வாழும் உறவுகள் தங்கள் வயோதிபப் பெற்றோரை தனிமையில் நாட்டிற்கு அனுப்புவது தொடர்பில் சிந்திக்க வேண்டும். நாட்டில் வாழும் பெற்றோருக்கு தேவையான பணத்தை மட்டுமே அனுப்புவதும் நல்லது. பராமரிக்க முடியாத சொத்துக்களை விற்று பணத்தை வங்கியிலிடுவதும் நல்லதே.

கிளிநொச்சியில் கொல்லப்பட்ட வயோதிபத் தாயின் இழப்பினால் வெளிநாட்டில் வாழும் அவரது ஐந்து பிள்ளைகளும் எந்தளவு துயரத்தில் மூழ்கியிருப்பர் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# மற்றுமொரு அபத்தமான நடைமுறை

**- விகிர்தன் -**

இலங்கை தற்போது பொருளாதார ரீதியில் கடும் சிக்கல்களை எதிர்கொண்டு வரும் வேளையில் அதற்கு உரிய தீர்வுகளை கண்டறிவதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அப்பால் புதிய புதிய பிரச்சினைகளையே உருவாக்கி வருகின்றது.

ஒரே நாடு - ஒரே சட்டம் என்கின்ற ஜனாதிபதி செயலணியை உருவாக்கி, ஞானசார தேரரை அதற்கு தலைவராக நியமித்தமை தொடர்ந்து சர்ச்சைக்குரியதாகவே பார்க்கப்படுகின்றது. பலரும் அதனை தொடர்ந்து விமர்சித்து வருகின்றனர்.

அதேபோல் மற்றுமொரு சர்ச்சைக்குரிய அறிவிப்பை சில தினங்களுக்கு முன்னர் அரசாங்கம் வெளியிட்டுள்ளது. வெளிநாட்டவர்களை திருமணம் செய்யும் இலங்கையர்கள் பாதுகாப்பு அமைச்சில் அனுமதி பெற வேண்டும் என்ற அறிவிப்பே அது.

2022 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இது நடைமுறைக்கு வரும் வகையில் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த சுற்றறிக்கை பதிவாளர் திணைக்களத்தினால் சகல மாவட்ட பதிவாளர் திணைக்களங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான திருமணங்களுக்கு இதற்கு முன்னர் உரிய விசா அனுமதிப் பத்திரம், சிவில் நிலைமையினை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பன மாத்திரமே அவசியமாகக் காணப்பட்டது.

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுவதை தடுக்கும் நோக்கில், வெளிநாட்டு பிரஜையை இலங்கை பிரஜை ஒருவர் திருமணம் செய்து கொள்ளும் போது, இப்புதிய நடைமுறையை பின்பற்ற வேண்டுமென இப்போது அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து, வெளிநாட்டவர்கள் உள்ளூர் நபர்களை திருமணம் செய்ய விரும்பினால், பாதுகாப்பு அமைச்சகத்திடம் அனுமதி பெறுவதை இலங்கை கட்டாயமாக்கியுள்ளது என சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையின் படி, வெளிநாட்டவர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான திருமணங்களால் தேசிய பாதுகாப்பு மற்றும் வேறு பிரச்சினைகள் எழக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர் தொடர்பான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அறிக்கை பெற்று கூடுதல் மாவட்ட பதிவாளர்கள் மூலம் மட்டுமே இதுபோன்ற திருமணங்களை பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வெளிநாட்டவர்களால் உள்நாட்டு மக்கள் திருமணம் செய்து ஏமாற்றப்படுவதைத் தடுக்க இந்த நடவடிக்கை தேவை என்றும், உள்நாட்டு மக்களை திருமணம் செய்யும் வெளிநாட்டவர்களால் போதைப் பொருள் கடத்தல் அதிகரித்து வருவதைக் கண்காணிக்க வேண்டியதன் அவசியமும் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை ஜனநாயகமற்றது, மனித உரிமை மீறல் என்று கடும் விமர்சனங்கள் பர தரப்பினராலும் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கையில் உள்ளவர்களை வெளிநாட்டு பிரஜைகள் திருமணம் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி தேவை என்ற அரசாங்கத்தின் புதிய விதிமுறை தொடர்பாக சட்டத்தரணி திஷ்ய வெரகொட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சட்டத்தரணி வெரகொட, "எனது பிள்ளைகளும் வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள். ஒரு நாள் அவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பும் போது, அவர்கள் பாதுகாப்பு செயலாளரிடம் அனுமதி கேட்பதை நான் விரும்பவில்லை. அவர்கள் விரும்பும் யாரையும் திருமணம் செய்து கொள்ள எனது அனுமதியே தேவையில்லை. தாங்கள் விரும்பும் நபரை திருமணம் செய்து கொள்ள அவர்கள் ஏன் வேறு ஒரு அதிகாரத்திடம் அனுமதி பெற வேண்டும்?" எனக் கேள்வி எழுப்புகின்றார்.

புதிய இந்த முன் நிபந்தனைகள் சட்டவிரோதமானது, சட்டத்திற்கு புறம்பானது, பகுத்தறிவற்றது, நியாயமற்றது, அபத்தமானது, அதிதீவிரமானது மற்றும் அரசியலமைப்பிற்கு முரணானது என்று குறிப்பிட்ட அவர், மனித உரிமைகள் ஆணைக்குழு இதனை முன்னுரிமையின் அடிப்படையில் விசாரிக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இந்த சுற்றறிக்கையை அமல்படுத்த வேண்டாம் எனப் பதிவாளர் நாயகத்திற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு கட்டளையிடுமாறும் திஷ்ய வெரகொட கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாட்டவர்களை திருமணம் செய்ய பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பிற்கு நாட்டின் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கண்டனம் தெரிவித்துள்ளது.

திருமணம் மனிதனின் அடிப்படை உரிமை எனவும், இந்த அறிவிப்பு ஒருவரது அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை மீறும் செயல் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இப்புதிய நடைமுறையினால் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள உறவுகளுக்கு சிக்கல் ஏற்படும் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற தமிழ் மக்களில் பெரும்பாலோனோர் தாங்கள் வாழ்கின்ற நாடுகளில் குடியுரிமை பெற்றவர்களாக உள்ளனர். அவர்களில் பலர் தாயகத்தில் திருமணம் செய்கின்ற வழக்கத்தை அல்லது விருப்பத்தைக் கொண்டவர்களாக உள்ளனர். இனிமேல் அவ்வாறு திருமணம் செய்வோர் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் தங்களை பதிவு செய்து அனுமதி பெறுவதானது பிரச்சினையான ஒன்றே.

அரசாங்கத்தின் இந்த புதிய நடைமுறை அதிகம் தமிழ் மக்களையே பாதிக்கும். சிங்களவர்களோ, முஸ்லிம்களோ வெளிநாட்டவரை திருமணம் செய்வது மிக அரிதானதே. எனினும் கூட, சிங்களவரான ஒரு சட்டத்தரணி இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

தமிழர் தரப்பிலிருந்து இந்த நடைமுறைக்கு எதிராக குரல்கள் எழுந்ததாகத் தெரியவில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றுள்ள உறுப்பினர்கள் இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப வேண்டும். மனித உரிமை அமைப்புகளிலும் முறைப்பாடுகளைப் பதிவு செய்ய வேண்டும்.

# இன்னல்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

பழக்க வழக்கங்கள் எமது உடல் நலத்தில் மிகவும் முக்கியமான பங்கை



வகிக்கின்றது. பெற்றோர்கள் பிள்ளைகளின் உணவுப்பழக்கத்தைச் சீராக வைத்திருப்பதில் குழந்தைகளின் மழலைப் பருவத்திலிருந்து கவனம் எடுத்துக் கொண்டால் அவர்களின் உடல் நலம் சீராகவிருக்கும். ஆனால் இவற்றிற்கு மேலாக ஒருவர் செய்யும் தொழில், வாழ்கின்ற சூழல் அமைப்பு எல்லாமே உடல்நிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. சில நோய்கள் பரம்பரையாகவும் வருவதுண்டு. நாம் எவ்வளவு தூரம் இயற்கை சார்ந்து வாழ்கின்றோமோ, அவ்வளவு தூரம் நாம் ஆரோக்கியமாக வாழ்கின்றோம்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன். நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். (தொடரும்)



CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 80



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு 2022 நல் வாழ்த்துகள். ஹோமியோபதி மருத்துவர் எம். எல். ஜே. லார்ட்வின் லாரன்ஸ் அவர்களின் "பாட்டி வைத்தியம்" என்ற மின்நூலினை வாசிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அந்த நூலிலிருந்தும் சில தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

மூளை, இருதயம், நுரையீரல், கல்லீரல் ஆகியவற்றை மனித உடலின் இராஜ கருவிகள் என்கிறார் மருத்துவர் லார்ட்வின் லாரன்ஸ். அலோபதி (allopathy) என்பது நோய் அறிகுறிகளுக்கு எதிரான தன்மைகளைக் கொண்ட மருந்துகளைப் பயன்படுத்தி நோய்களை உடலுக்குள் அமுக்கிவைத்து குணப்படுத்துதல் என்ப தாகும். இதனால் பல ஒவ்வாத் தன்மைகள் உடலில் ஏற்படுகின்றன. இயற்கையை விட்டு விலகிச் செயற்கை வாழ்வில் வாழ்கையில் பல இன்னல்களை எதிர்கொள்ளுகின்றனர். விஞ்ஞான ஆய்வு களிலும் மூலிகைகளுக்குள்ள நோய் தீர்க்கும் ஆற்றல் பற்றித் தெரிய வருகின்றன. இந்தியாவில் ஏழாயிரத்திற்கு மேற்பட்ட மூலிகைகள் பிணிகளைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் 427 மூலிகைகள் மிகவும் அபூர்வமான தன்மை கொண்டன. இந்த மூலிகைகளை அடிப்படையாகக் கொண்ட வீட்டு மருத்துவத்தை இன்றும் உலகில் எழுபது சதவீதமான மக்கள் பயன் படுத்துகின்றனர் என்று கூறப்படுகிறது.

மனிதர் உண்ணும் உணவில் அறுசுவை களான இனிப்பு, புளிப்பு, கசப்பு, கார்ப்பு துவர்ப்பு, உவர்ப்பு ஆகியவை இடம் பெறுதல் வேண்டும். மனிதன் உண்ணத் தவறும் சுவையை மருந்தாகக் கொடுக்கப் பட வேண்டியுள்ளது என்று கூறுகின்றனர்.

அரைத்த குங்குமப்பூவை தாய்ப்பாலில் சேர்த்து இரண்டு துளிகள் கண்ணில் விட்டுவர கண்தொடர்பான நோய்கள் குணமாகும். கண்ணில் எற்படும் சிகப்பு நிறத்தை நீக்க பெண்கள் அடிக்கடி மல்லிகைப் பூவை சூடிக்கொள்ள வேண்டும். ஆண்கள் இரண்டு துளி பன்னீரை விட்டுக் கொள்ளலாம்.

அவித்த முட்டையை இரண்டாகப் பிளந்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கண்களின் மேல் வைத்து விழாதவாறு கட்டிக் கொண்டு படுத்துத் தூங்கினால் கண்ணில் ஏற்படும் நோய்கள் குணமாகும்.
தளிரான துளசி இலைகளைத் தண்ணீரில் சுத்தமாகக் கழுவிய பின்பு அவற்றைப் பிழிந்து சாறாக்கி அதிகாலையில் இரண்டு



துளிகள் கண்ணில் விட்டுவர மாலைக்கண் நோய் குணமாகும்.

தலையில் ஏற்படும் புழுவெட்டுப் போன்ற பகுதிகளுக்கு சிறிய வெங்காயத்தை இரண்டாக வெட்டிய துண்டுகளால் தேய்த்துவர அவை மறைந்து போகும்.
வெந்நீரில் எலுமிச்சம் பழச்சாற்றைக் கலந்து சிறிதளவு சர்க்கரை சேர்த்து தொடர்ந்து பருகிவர மூன்று மாதங்களில் முகப்பருக்கள் நீங்கும்.
எலுமிச்சம் பழச்சாறு, துளசிச்சாறு, தேன், சந்தனம் ஆகியவற்றை சமவளவில் கலந்து குழைத்து முகப்பருக்கள் மீது தடவி வர முகப்பருக்கள் நீங்கும்.

வெள்ளரிக்காய்களை வட்டமாக வெட்டி முகத்தில் பரவி 15 நிமிடங்கள் வைத்து வர முகவறட்சி நீங்கும். முகத்தில் பளபளப்பு உண்டாகும்.

காதில் ஏற்படும் வலியை நீக்க இஞ்சி, பூண்டு, துளசி இலையின் தளிர் ஆகிய வற்றைச் சமவளவில் எடுத்துச் சாறாக்கி மூன்று துளிகளை மூன்று நாட்கள் விட்டுவரலாம்.

தோல் நீக்கிய வெங்காயத்தை இடித்துச் சாறாக்கி இரண்டு அல்லது மூன்று துளிகளைக் காதில் விட்டுவர காதில் ஏற்படும் வலி, புண்கள் குணமாகும்.

சுக்கைப் பற்களினால் கடித்து மென்று உண்ணப் பல்வலி குறையும். நான்கு உப்புக்கல்லும், சிறிது புளியும் எடுத்து இடித்து வலிதரும் பல்லின் மேல் வைத்து எச்சில் உமிழ்ந்து எச்சிலுடன் ஊறவிட்டு ஐந்து நிமிடங்கள் கழித்துத் துப்பி விட்டு மென்சூடான வெந்நீரால் வாய் கொப்பளித்து வரப் பல்வலி நீங்கும்.

வாயிலும், நாக்கிலும் புண்கள் ஏற்பட்டால் பசு நெய் தடவ வாய்ப்புண்கள் ஆறும். அத்துடன் அகத்திக் கீரையை அடிக்கடி சாப்பிட்டு வரவேண்டும்.

குரலில் கரகரப்பு ஏற்பட்டால் தூது வளையைப் பச்சையாக அல்லது வதக்கி 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் குரல் இனிமையாகும்.

மஞ்சள் துண்டில் சிறிதாக நெருப்பு பற்ற வைத்து வரும் புகையை சுவாசித்து வர சளி அல்லது ஜலதோசம் நீங்கும்.

ஒன்றரை டம்ளர் தண்ணீரில் அரை மேசைக்கரண்டி மஞ்சள் போட்டு கொதிக்க வைத்து இறக்கி சர்க்கரை சேர்த்து மூன்று நேரம் அரை டம்ளர் குடிக்க மூக்கிலிருந்து சளி ஒழுகுவது நின்றுவிடும்.

அதிமதுரத்தைப் பொடிசெய்து காலை, மாலை அரை தேக்கரண்டி வாயில் போட்டு வெது வெதுப்பான வெந்நீர் அருந்தினால் வறட்டு இருமல் நீங்கும்.

காலையில் மூன்று விரல் அளவு மிளகினைப் பொடியாக்கி தேனில் குழைத்து வெந்நீருடன் அருந்த இருமல், சளி குணமாகும். இரண்டு வெங்காயத்தை ஐந்து மிளகுடன் சேர்த்துச் சாப்பிட சளித்தொல்லைகள் நீங்கும்.

> **அன்பான விளம்பரம் வாசகர்களே!**
>
> இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கிய மாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

வெள்ளைப் பூண்டினை வேகவைத்து பாலுடன் கலந்து 48 நாட்கள் குடித்து வந்தால் ஆஸ்துமா நோய் குணமாகும்.

இந்தத் தொடர்கட்டுரையிலும் சில வீட்டு மருத்துவக் குறிப்புக்களைப் பகிர்ந்து கொண்டேன். இங்கே பகிர்ந்து கொண்டவை அனைத்தும் வீட்டில் பொதுவாக இருக்கும் பொருட்கள் மூலம் காணக்கூடிய தீர்வுகளாக உள்ளன.
**"மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு"** என்று குறள் 945 கூறுகிறது. இதன் பொருள் "உடலுக்கு மாறுபாட்டைச் செய்யாத உணவையும், தன் மனம் விரும்பியபடி அல்லாமல் நோய் வராத அளவினாலே உண்பானானால், அவனுக்குப் பிணிகளால் துன்பமில்லை." என்பதாகும். அளவோடு உண்ணும் உணவு உடலுக்கும் மருந்தாக அமைவதுண்டு.

நாம் உண்ணும் உணவு, உணவு சார்ந்த

தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

## ஆனந்தம் அகநிறைவு அமைய பொங்கல் அமையட்டும்!



பொங்கலென்று சொன்னாலே
பூரிப்பும் கூடவரும்
மங்கலங்கள் நிறையுமென்று
மனமதிலே தோன்றிவிடும்
சங்கடங்கள் போவதற்கும்
சந்தோசம் வருவதற்கும்
பொங்கலை நாம்வரவேற்று
புதுத்தெம்பு பெற்றிடுவோம்!

தைபிறந்தால் வழிபிறக்கும்
எனவெண்ணி மகிழுகிறோம்
கைகட்டி நின்றுவிடின்
வழியெமக்கு வந்திடுமா
தைபிறக்க முன்னாலே
தளர்வின்றி உழையுங்கள்
தைபிறக்கும் வேளையிலே
கைகொடுக்கும் தைமாதம்!

எதிர்காலம் மகிழ்வாக
அமையுமென எண்ணிடுவோம்
இறந்தகாலம் தனையெண்ணி
எமையிழக்கா திருந்திடுவோம்
நிகழ்கால நிலையினிலே
நிம்மதியை நாடிடுவோம்
வரும்பொங்கல் எங்களுக்கு
வளமாகும் எனநினைப்போம்!

புத்தரிசி வாங்கிடுவோம்
புதுப்பானை எடுத்துவைப்போம்
மொத்தமுள்ள உறவுகளை
முழுமனதாய் வாழ்த்திடுவோம்
பால்பொங்கி வருவதுபோல்
வாழ்வுவளம் பெருகவென
சர்க்கரையை சேர்த்தபடி
பொங்கியே மகிழ்ந்திடுவோம்!

பெற்றாரின் ஆசியினை
பெரும்பேறாய் எண்ணிடுவோம்
கற்பித்த ஆசானை
கால்தொட்டு வணங்கிடுவோம்
புத்தாடை எனுமெண்ணம்
புத்துணர்வை வழங்கட்டும்
பொங்கலென்றும் வாழ்வினிலே
புத்தொளியாய் மிளிரட்டும்!

சாந்தியொடு சமாதானம்
வரப்பொங்கல் அமையட்டும்
சன்மார்க்கம் மனமெல்லாம்
நிறையப் பொங்கலமையட்டும்
வேண்டியவர்க்கு வேண்டியன
கிடைக்கப் பொங்கலமையட்டும்
வீண்வம்பு வேதனைகள்
விலகப் பொங்கலமையட்டும்!

ஆனந்தம் அகநிறைவு
அமைய பொங்கலமையட்டும்
அறம்நீதி அத்தனையும்
நிலைக்கப் பொங்கலமையட்டும்
வேற்றுமைகள் வில்லங்கம்
விலகப் பொங்கலமையட்டும்
விரோதமனம் விட்டோட
பொங்கலெமக் கமையட்டும்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

# வடலியடைப்பு ஒன்றியம், கனடா - 22 ஆவது ஆண்டு விழா



அருந்ததி ஞானநாயகன்

வடலியடைப்பு ஒன்றியம் கனடாவின் 22 ஆவது ஆண்டு விழா 2021ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் திகதி காலை 9 மணிக்கு (கனடா EST நேரம்) மெய்நிகர் ஒளி பரப்பாக Zoomஇல் ஆரம்பமாகியது. இந் நிகழ்வு இம்முறை இரண்டாவது முறை யாக Zoomஇல் நடைபெற்றது. இவ் வருடமும் இந்நிகழ்வை உலகம் முழுவதிலும் உள்ள பல நாடுகளில் இருந்து வடலியடைப்பைச் சேர்ந்த மக்கள், அவர்களது சொந்தங்கள், எனப் பலர் பங்கு பற்றியும் பார்த்தும் மகிழ்ந்தனர். கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், நோர்வே, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து பல நிகழ்வுகள் ஒளிபரப்பப்பட்டன.

90 Zoom இணைப்புகள் மற்றும் பல facebook இணைப்புகள் மூலம் 200இற்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வைப் பார்த்து மகிழ்ந்தனர். இம்முறை 60 நிகழ்வுகள் ஒளிபரப்பப்பட்டதால் விழா நிகழ்வுகள் எட்டு மணித்தியாலங்கள் நடைபெற்று மாலை ஐந்து மணி அளவில் நிறைவுபெற்றன.

நிர்வாக சபைத் தலைவர் செல்வரட்ணம் அன்பழகனைத் தொடர்ந்து நிர்வாகசபை உறுப்பினர் எல்லோரும் மங்கல விளக் கேற்றியதுடன் நிகழ்வுகள் 9:10 மணிக்கு ஆரம்பமானது. இதைத் தொடர்ந்து தேவாரம், பின்னர் இறை வணக்கத்தை மைதிலி கிருஷ்ணன் அமெரிக்காவிலிருந்து வழங்கினார். அடுத்து தமிழ்த்தாய் வணக் கத்தையும், கனடியத்தேசிய கீதத்தையும் ஆரபி உதயநேசன் கனடாவிலிருந்து இசைக்க, அடுத்த நிகழ்வாக சிவானந்தம் ஆசிரியரால் இயற்றப்பட்ட வடலியடைப்பு ஒன்றிய கீதத்தை வடலியடைப்பில் சங்கீத



ஆசிரியராக இருந்த சிதம்பரேஸ்வரி தர்மலிங்கம் அவர்கள் நியூசிலாந்தில் இருந்து வழங்கினார்.

இதைத்தொடர்ந்து உயிரிழந்தவர்களை நினைவுகூர ஒரு நிமிட அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து இலங்கையில் இருந்து மதுவந்தி பிரதாபசர்மாவின் பக்திப்பாடல், பவதி நகுலேஸ்வரனின் வரவேற்பு நடனம், துளசி ஜெயக்குமாரின் தமிழ் வாய்ப்பாட்டு என்பன நடைபெற்றன.

அடுத்த நிகழ்வாக இலங்கையிலிருந்து வாழ்த்துரையை மதிவாணி இராஜன் அவர்கள் வழங்கினார். அவர் தனது உரையில் இவ்வருடம் வடலியடைப்பு ஒன்றியம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு நிதி உதவி வழங்கி அதன் ஒரு பகுதி தேவையை நிவர்த்தி செய்ததற்கு வடலியடைப்பு மக்கள் சார்பில் மகிழ்ச்சியும் நன்றியும்




தெரிவித்தார். அத்துடன் அதிக அளவு மழையால் நெல் விளைச்சல் பாதிப் படைந்தும், பெரும்தொற்று நோயால் மக்களின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தும் இருக்கும் இக்காலத்தில் புலம்பெயர் உறவுகள் தாய் மண்ணை மறக்காது ஆற்றிவரும் உதவியால் பல உயிர்கள் வாழ முடிவதாகவும் கூறினார். பிறக்கப்போகும் புதுவருடம் நன்மைதர இறைவனை வேண்டி வாழ்த்தினார்.

வாழ்த்துரையைத் தொடர்ந்து கீர்த்தனா இராஜன் இலங்கையிலிருந்து வீணை இசையையும், இங்கிலாந்திலிருந்து சகோதரர்கள் பிரியங்கன் மற்றும் நிஷானி மங்களரூபன் கர்நாடக சங்கீத இசையை யும் வழங்கினர். இலங்கையில் இருந்து சுவிஷாந் கனேந்திரன் விடுதலை கீதம் மற்றும் தெலுங்கு திரை இசை நடனம் வழங்கினார். சுவிஷாந் இலங்கை DAN ரிவியில் திரையிசை நடனங்களைச் செய்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்த்துரையை இந்தியாவிலிருந்து ஸ்ரீவாணி ஜோதிட நிலைய அதிபர் ஸ்ரீ விக்னேஸ்வரன் நடராஜா வழங்கினார். அதில் அவர் இயற்கை அனர்த்தங்களா லும், கோவிட்-19 பெரும் தொற்று நோயா லும் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் சமைத்த உணவு வழங்கியது, ஏழை மாணவர்களுக்குப் படிப்பதற்கு உபகரணங்கள் வழங்கியது, வசதிஅற்றவர்களுக்கு வீடு கட்ட வசதி செய்தது, ஆரம்பப்பாடசாலை கட்ட நிதி உதவி வழங்கியது போன்ற பல சேவைகளை செய்துவரும் வடலியடைப்பு ஒன்றியத்திற்கு வடலியடைப்பு மக்கள் சார்பில் வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்தார்.

வாழ்த்துரையைத் தொடர்ந்து இலங்கை யிலிருந்து சிவகரன் ஆதிபனின்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)














# HomeLife GTA Realty Inc.






















# Awards 2021








# மாநாடு - திரைவிமர்சனம்




2021 நொவம்பரில் சிம்பு நடிப்பில் வெளியான படம் மாநாடு. இப்படத்தின் இயக்குனர் வெங்கட் பிரபு time loop என்ற பிரபல கதை அமைப்பு முறையை இப்படத்தில் பயன்படுத்தியுள்ளார்.

அப்துல் (சிம்பு) என்பவர் Dubaiயிலிருந்து இந்தியாவிற்கு ஒரு கல்யாணத்திற்காக வருகிறார். விமானத்தில் சீதாலட்சுமி (கல்யாணி பிரியதர்ஷன்) என்பவரைச் சந்தித்து நட்புக் கொள்கிறார். இருவரும் தாங்கள் ஒரே கலியாணத்திற்காகச் செல்கின்றனர் என அறிந்து விமான நிலையத்தில் இருந்து சேர்ந்தே பயணம் செய்கிறார்கள்.

திருமணம் நடைபெற முன்னர் அதைத் தடுத்து மணப் பெண்ணை அவளது காதலனுடன் (அப்துலின் நண்பர்) கல்யாணம் செய்து வைக்க அப்துல் தனது நண்பர்களுடன் திட்டமிடுகிறார். இதை மணமகனின் நண்பரான சீதா பின்னரே அறிகிறார்.

இவ்வாறு அப்துல் நண்பர்களுடன் மணப் பெண்ணைக் கடத்தும்போது அவர்கள் தனுஷ்கோடி (S.J. சூர்யா) என்பவரின் தலைமையில் உள்ள சில காவல் அதிகாரிகளிடம் சிக்குகின்றனர். இவ்வாறு சிக்குவதால் இவர்கள் ஒரு பெரும் அரசியல் சதியில் சேர்க்கப்படுகின்றனர்.



இச்சதியில் சிக்கிய அப்துல் இறக்கிறார். ஆனால் அன்று காலை ஒன்றும் நடக்காத மாதிரி விமானத்தில் நித்திரையால் திரும்ப எழும்புகிறார்.

இவ்வாறு சிக்கலில் இறந்து காலையில் திரும்பவும் விமானத்தில் எழுந்து மீண்டும் சிக்கலில் சிக்கி இறந்து திரும்பி எழும்பி வருகிறார் அப்துல். இதுவே time loop கதை அமைப்பு.

அரசியல் சதி என்ன? இதில் அப்துலின் பங்கு என்ன? இந்த time loop எப்பொழுது முடியும்? என்று படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இவ்வாறு ஒரே நாளை கதாநாயகன் மீண்டும் மீண்டும் அனுபவிக்கும் time loop அமைப்புமுறையில் எடுக்கப்பட்டு 1993இல் வெளியான Groundhog Day என்ற ஆங்கிலப்படம் பிரபலமாகியது.



இம்முறையில் எடுக்கப்பட்ட முதல் இந்தியப் படம் இவ்வருடம் வெளியான Jango என்ற தமிழ்த் திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாடு இம்முறையைத் தமிழ் பொழுது போக்குப் படத்திற்காக மாற்றி அமைத்துள்ளது. சிம்புவும் S.J. சூர்யாவும் நன்றாக நடித்துள்ளனர். இதில் பிற கதா பாத்திரங்களுக்கு அதிக பங்கு இல்லை. படத்தின் தொடக்கத்தில் தேவையில்லாத சில நகைச்சுவை வசனங்கள் இக் கதைக்குப் பொருந்தவில்லை.




படத்தில் பிற மதங்களை ஏற்கும் காட்சிகள் இருக்கின்றன. கதையே இதை நன்றாகக் கூறுகின்றபடியால் கதாநாயகன் இதை அதிகமாக வசனங்கள் மூலம் விவரித்தது தேவையற்ற காட்சிகளாக இருந்தன.

இருந்தாலும் படம் விறுவிறுப்பாகச் செல்கிறது. தமிழ் இரசிகர்களுக்குப் புதிய பட அமைப்பு முறையை அறிமுகம் செய்ததும், முக்கிய கருத்து கதையில் இருந்ததும் இப்படத்தைச் சிறப்பிக்கிறது.

மாநாடு அனைவரும் பார்க்கக்கூடிய ஒரு புதுமையான பொழுதுபோக்குத் திரைப் படம்.

# ஆனந்தம் அகநிறைவு அமைய பொங்கல் அமையட்டும்!



பொங்கலென்று சொன்னாலே
பூரிப்பும் கூடவரும்
மங்கலங்கள் நிறையுமென்று
மனமதிலே தோன்றிவிடும்
சங்கடங்கள் போவதற்கும்
சந்தோசம் வருவதற்கும்
பொங்கலை நாம்வரவேற்று
புதுத்தெம்பு பெற்றிடுவோம்!

தைபிறந்தால் வழிபிறக்கும்
எனவெண்ணி மகிழுகிறோம்
கைகட்டி நின்றுவிடின்
வழியெமக்கு வந்திடுமா
தைபிறக்க முன்னாலே
தளர்வின்றி உழையுங்கள்
தைபிறக்கும் வேளையிலே
கைகொடுக்கும் தைமாதம்!

எதிர்காலம் மகிழ்வாக
அமையுமென எண்ணிடுவோம்
இறந்தகாலம் தனையெண்ணி
எமையிழக்கா திருந்திடுவோம்
நிகழ்கால நிலையினிலே
நிம்மதியை நாடிடுவோம்
வரும்பொங்கல் எங்களுக்கு
வளமாகும் எனநினைப்போம்!

புத்தரிசி வாங்கிடுவோம்
புதுப்பானை எடுத்துவைப்போம்
மொத்தமுள்ள உறவுகளை
முழுமனதாய் வாழ்த்திடுவோம்
பால்பொங்கி வருவதுபோல்
வாழ்வுவளம் பெருகவென
சர்க்கரையை சேர்த்தபடி
பொங்கியே மகிழ்ந்திடுவோம்!

பெற்றாரின் ஆசியினை
பெரும்பேறாய் எண்ணிடுவோம்
கற்பித்த ஆசானை
கால்தொட்டு வணங்கிடுவோம்
புத்தாடை எனுமெண்ணம்
புத்துணர்வை வழங்கட்டும்
பொங்கலென்றும் வாழ்வினிலே
புத்தொளியாய் மிளிரட்டும்!

சாந்தியொடு சமாதானம்
வரப்பொங்கல் அமையட்டும்
சன்மார்க்கம் மனமெல்லாம்
நிறையப் பொங்கலமையட்டும்
வேண்டியவர்க்கு வேண்டியன
கிடைக்கப் பொங்கலமையட்டும்
வீண்வம்பு வேதனைகள்
விலகப் பொங்கலமையட்டும்!

ஆனந்தம் அகநிறைவு
அமைய பொங்கலமையட்டும்
அறம்நீதி அத்தனையும்
நிலைக்கப் பொங்கலமையட்டும்
வேற்றுமைகள் வில்லங்கம்
விலகப் பொங்கலமையட்டும்
விரோதமனம் விட்டோட
பொங்கலெமக் கமையட்டும்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

# பிரபஞ்சத்தின்...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

தொலைநோக்கியில் தவறுகள் ஏற்பட்டால் அது இருக்கும் இடத்துக்குச் சென்று அவற்றைப் பழுது பார்க்க முடியாது. இதனால் Webb தொலைநோக்கியின் தயாரிப்பில் அதிகம் கவனம் செலுத்த வேண்டியிருந்தது என்றார்.



Hubble தொலைநோக்கியின் கண்ணாடி 2.4 மீற்றர் விட்டம் உடையது. அது பூமியிலிருந்து 545 கிலோ மீற்றர் உயரத்தில் நிலைகொண்டுள்ளது. Webb தொலைநோக்கியின் கண்ணாடி 6.5 மீற்றர் விட்டம் உடையது. அது பூமியில் இருந்து 1.6 மில்லியன் கிலோ மீற்றர் உயரத்தில் நிலைநிறுத்தப்படும்.

Hubble தொலைநோக்கி 1990ஆம் ஆண்டில் ஏவப்பட்டபோது அது 12,200 கிலோகிறாம் எடை கொண்டதாகவும் 31 வருடங்கள் வரையும் பாவனையில் இருக்குமாறும் வடிவமைக்கப்பட்டது.

Webb தொலைநோக்கி 2021 ஆம் ஆண்டில் ஏவப்பட்டபோது அது 10 வருடங்கள் வரையில் பாவனையில் இருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. Webb தொலைநோக்கி 6,200 கிலோ கிறாம் நிறையை உடையது. ஆனால் Webb தொலைநோக்கியின் எரிபொருள் கொள்கலன்கள் அதன் அருகில் சென்று எரிபொருள் நிரப்பும் வகையில் வடிவமைக் கப்பட்டுள்ளது. எமது விஞ்ஞானம் பிற் காலத்தில் Webb தொலைநோக்கி பயணிக்கும் இடம்வரை பிரயாணம் செய்யலாம் என முன்னேறினால் அதை மீள் புனரமைக்க ஏதுவாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.



Hubble மற்றும் Webb தொலைநோக்கி களுக்கு இடையே உள்ள முக்கிய தொழில்நுட்ப வித்தியாசம் அவற்றினுடைய கண்ணாடிகளின் தன்மையில் தங்கியுள்ளது. Hubble தொலைநோக்கியால் பல மில்லியன் கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கும் ஒளியைப் பார்க்க முடிந்தாலும் அதனால் குறுகிய அலைநீளம் உள்ள Ultraviolet ஒளிக்கதிர்களையே சேகரிக்க முடிந்தது. ஆனால் Webb தொலை நோக்கியின் பொன் முலாமிடப்பட்ட மிகப் பெரிய கண்ணாடியால் மிகவும் தொலைவில் உள்ள (13.8 பில்லியன் வருடங்கள்) நீண்ட அலை நீளமுள்ள Infrared ஒளிக்கதிர்களைச் சேகரிக்க முடியும்.

# BASEMENT FOR RENT

**MCLEVIN & NEILSON**
1 Bedroom bsmt apt.for rent with furniture. Sep. entrance, Parking, laundry. ladies,students couple preferred.Avail. immediately.
**Call/TEXT:- 647.771.8426**

**14TH AVENUE & MCCOWAN**
2 bedroom bsmt for rent (Look New). Sep. Entrance. Parking, Laundry. Close to all facilities. Avail. immediately.
**416.318.7103 / 905.471.9941**

**STAINES / STEELES**
2 bedroom walkout bsmt For rent. Sep.entrance. Sep laundry and dryer. Close to. Avail. immediately.
**416.579.3022/ 647.327.9007**

**MIDLAND & FINCH**
2 bedroom walk out basement for rent. 1 parking. $1500 for 2 people.
தொடர்புகளுக்கு : **647.470.9968.**

**MARKHAM**
1 bedroom bsmt for rent. No separate entrance, entrance through front door. 1 Parking. Avail. January 01, 2022
தொடர்புகளுக்கு : **(647) 760-8329**

**MORNINGSIDE & MCNICOLL**
2-bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry.Close to TTC, school.Couple/Small family preferred
